ஸ்ரீரங்கம் வருவாய் கோட்டாட்சியர் அவர்களின் செயல்முறைகள்,
முன்னிலை:திரு.அ.கோ.ராஜராஜன்.,B.E.,

ந.க.அ5/2888/2016

நாள்:22.11.2016

பொருள்: கிராம நிர்வாகம் - திருச்சிராப்பள்ளி மாவட்டம் - மருங்காபுரி வட்டம் - தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட கிராம நிர்வாக அலுவலர்களுக்கு கிராம நிர்வாக அலுவலர் நிலையில் பணிவரன்முறை செய்து ஆணை வழங்குதல்.

பார்வை: 1. அரசாணை(நிலை)எண்.80 நாள்:02.03.2016
2. மருங்காபுரி வட்டாட்சியரின் கடிதம் ந.க.அ3-18-2016 நாள்:03.11.2016.

ஒஒஒஒஒ

ஆணை:

பார்வை 1-ல் காணும் அரசாணையின்படி 01.02.2016 வரையில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு பணி நியமனம் செய்யப்பட்டுள்ள கீழ்க்கண்ட நபர்களுக்கு அவர்கள் பணியில் சேர்ந்த நாள் முதல் கிராம நிர்வாக அலுவலர் நிலையில் பணி வரன்முறை செய்திடவேண்டும். பார்வை 2-ல் காணும் மருங்காபுரி வட்டாட்சியர் கடிதத்தில் தனியர்கள் பணிப்பதிவேடு பரிசீலனை செய்யப்பட்டது. தனியர்கள் பணியில் சேர்ந்த நாள் முதல் இந்நாள்வரையிலும் பணி சரிபார்ப்புக் காலங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளது. எந்தவிதமான பணியிடை முறிவும் இன்றி பணிபுரிந்துள்ளனர். தனியர்கள் மீது எந்தவிதமான குற்றச்சாட்டுகளோ, தண்டனைகளோ ஏதும் நிலுவையில் இல்லை என அறிக்கையினை சமர்ப்பித்துள்ளார்.

மருங்காபுரி வருவாய் வட்டாட்சியர் அறிக்கையினை ஏற்றும், தனியர்களின் பணிப்பதிவேட்டின் அடிப்படையிலும் கிராம நிர்வாக அலுவலர் நிலையில் பணியில் சேர்ந்த நாள் முதல் பணிவரன்முறை செய்து ஆணை வழங்கப்படுகிறது.

| வ.எண். | கிராம நிர்வாக அலுவலர்களின் பெயர் | பணிபுரியும் கிராமம் | பணியில் சேர்ந்த நாள் | பணிவரன்முறை செய்யவேண்டிய நாள் |
|---|---|---|---|---|
| 1. | திரு.எ.காதர் மைதீன் | வளநாடு கிராமம் | 11.12.2015 மு.ப. | 11.12.2015 மு.ப. |
| 2. | திருமதி.ஜா.பாத்திமாபானு | அழகாபுரி கிராமம் | 14.07.2016 மு.ப. | 14.07.2016 மு.ப. |

அ.கோ.ராஜராஜன் 22/11/16
வருவாய் கோட்டாட்சியர்,
ஸ்ரீரங்கம்.

பெறுநர்:
சம்பந்தப்பட்ட கிராம நிர்வாக அலுவலர்கள்,
(வருவாய் வட்டாட்சியர் மூலமாக)

22/11/16

நகல்:
வருவாய் வட்டாட்சியர், மருங்காபுரி.
(சம்பந்தப்பட்ட நபர்களது பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் ஏற்படுத்தவேண்டியது)

நகல்: மாவட்ட ஆட்சித்தலைவர், திருச்சிராப்பள்ளி அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.

நகல்: மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.

e U1